பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | புரட்டாதி 16 | வியாழக்கிழமை | 02.10.2025 | அதிர்வு 062

## முகமாலையில் குண்டுகள் மீட்பு!

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட முகமாலை வடக்கு பகுதியில் நேற்று புதன்கிழமை வெடிக்காத நிலையில் 31 குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் வசிக்கும் 06



# அகழ்வுப் பணிகளுக்கு நிதி கிடைக்காததால் செம்மணிப் புதைகுழி வழக்கு ஒத்திவைப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

**யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கை எதிர்வரும் 13ஆம் திகதிக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.** 06

## தாஜுதீனின் கொலைக்கு கடந்த ஆட்சியாளர்களே முழுமையான பொறுப்பு

### அநுர அரசு குற்றச்சாட்டு



"முன்னாள் ரக்பி வீரர் வாசிம் தாஜுதீனின் கொலை போன்ற குற்றங்களை கிராமத்தில் உள்ள சிறிபால அல்லது ஞானரத்னம் செய்யவில்லை, மாறாக நாட்டை ஆண்ட ஆட்சியாளர்களே செய்தனர்."

– இவ்வாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"விசாரணைகளின்படி குற்றங்களில் தொடர்புடையவர்கள் அரசியல்வாதிகளாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சட்டம் அமுல்படுத்தப்படும்.

இந்தக்குற்றங்களைநாட்டைஆண்ட ஆட்சியாளர்களே செய்தார்கள். அவர்கள் அன்று குற்றங்களை மூடி மறைத்தனர்.

வாசிம் தாஜுதீன் 06

# தாஜுதீனின் மரணம் குறித்து வெளிப்படையான விசாரணை

## வேண்டும் என்று வலியுறுத்துகின்றார் நாமல்



முன்னாள் ரக்பி வீரர் வாசிம் தாஜுதீனின் மரணம் குறித்து அரசு பாரபட்சமற்ற மற்றும் விரிவான விசாரணையை நடத்த வேண்டும் என்றும், அதை அரசியல் மயப்படுத்த முயற்சிக்கக்கூடாது என்றும், இல்லையெனில் அது அவரது மறைந்த ஆன்மாவை அவமதிப்பதாக இருக்கும் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் மித்தெனியவில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 'கஜ்ஜா' என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிரமுகர், 2012 இல் தாஜுதீன் இறப்பதற்கு முன்பு அவரைப் பின்தொடர்ந்த வாகனத்தில் இருந்தார் என்று பொலிஸார் சமீபத்தில் வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து நாமலின் கருத்துக்கள் வெளியாகியுள்ளன. 06




இது கலிகாலம் என்பதற்கு சில விடயங்களை இன்று குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

வழக்கமாக ஆசிரியர்கள் பாடசாலையில் மாணவர்களைத் தாக்கினார்கள், அடித்தார்கள், வன்மையாகக் கண்டித்தார்கள் என்றுதான் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும். பொலிஸ் விசாரணைகள் நடைபெறும். பல சமயங்களில் மனித உரிமைகள் ஆணைக்குழு தலையீடு செய்யும். ஒழுக்கம், கண்டிப்பு, கடமையில் சிரத்தை போன்றவை காரணமாக கொஞ்சம் 'சீரியஸாக' பணிபுரியும் ஆசிரியர்கள் பலர் இத்தகைய அவர்களின் பண்பியல்பு காரணமாக விளக்கமறியல், தண்டனை, வேலை இழப்பு, ஓய்வூதியம் இழப்பு என்று சிக்கல்களை எதிர்கொள்வது தெரிந்த விடயம்தான் .

இவற்றிற்கு மாறான விவகாரம் ஒன்று மொனறாகலை நகரில் உள்ள முக்கிய பாடசாலை ஒன்றில் நடைபெற்றிருக்கின்றது.

பதினோராம் வகுப்பில் கல்வி பயிலும் மாணவன் ஒருவனிடம் இருந்த ஸ்மார்ட்போன் 06

# மன்னார் மக்களினுடைய போராட்டத்தை மதிக்க வேண்டும்; மிதிக்க வேண்டாம்!

## அரசாங்கத்தை வலியுறுத்துகின்றார் சிறிநேசன் எம்.பி.

**(மட்டக்களப்பு நிருபர்)**

மன்னார் மாவட்டத்தில் காற்றாலைத்திட்டம் தொடர்பாக, மன்னார் மக்களின் எதிர்ப்புப் போட்டம் அறுபது நாள்களாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அதனை தேசிய மக்கள் சக்தி அரசு மதிக்க வேண்டும். மிதிக்க நினைக்கக் கூடாது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

இவ்விடையம் தொடர்பில் நேற்று புதன்கிழமை அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

காவல் துறையினர் மக்களை அடக்குவதற்காக, பலாத்காரத்தினைப் பயன்படுத்தியுள்ளனர். இதனால்,



சாத்வீகப் போராளிகள் மூவர் காயப்பட்டுள்ளனர் என அறிய முடிகின்றது.

அகிம்சை வழிப்போராட்டத்திற்கு இம்சை வழியில் காவல்துறை வன்மத்தைப் பயன்படுத்தியுள்ளது.

கடந்த காலத்தில் தமிழரசுக் கட்சியின் அகிம்சைப் போராட்டத்தினை பேரினவாதத் தலைமைகள் பலாத்கார வன்முறையில் 30 ஆண்டுகள் அடக்கியதால், தமிழ் இளைஞர்கள் 30 ஆண்டுகள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அந்தப் படிப்பினையை சிங்களத் தலைமைகள் வேகமாக மறந்து செயற்படுகின்றன.

ஆண்டான் – அடிமை முறை சமூகத்துக்கே அடக்குமுறை, ஒடுக்குமுறை என்பன பொருத்தும். அதனை தேசிய மக்கள் சக்தி அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். வணக்கத்துக்குரிய மதத்தலைவர்கள் பந்தாடப்படுவது மக்களைக் கொதிப்படையச் செய்யும் என்பதை இந்த அரசாங்கம் உணர வேண்டும். மறுத்தால் தமிழ் மக்கள் மிக விரைவாக இந்த அரசு மீது நம்பிக்கை இழந்துவிடுவர். அவர்களை எதிர்மறையான நிலைக்கு இந்த அரசு தள்ளக்கூடாது. – என அவர் தெரிவித்துள்ளார்.





# முல்லை. புதுக்குடியிருப்பு தேவிபுரத்தில்

## வெடிபொருள்களுடன் புலிக்கொடி மீட்பு

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேவிபுரம் பகுதியிலுள்ள தோட்ட காணியிலிருந்து வெடிபொருள்களுடன் புலிக்கொடி மீட்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேவிபுரம் ஆ பகுதியிலுள்ள 168ஆம் இலக்க தென்னம் தோட்ட காணியினை உரிமையாளரினால் துப்பரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது காணியில் ஆர்.பி.ஜி ரக குண்டுகள், புலிக்கொடி போன்றவை இருந்துள்ளமையை அவர் கண்டுள்ளார். இதையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் காணியின் உரிமையாளரினால் நேற்றுக் காலை முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டமையுடன் நீதிமன்ற அனுமதியுடன் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் அப்பகுதியில் சோதனை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.








# விசுவமடு மக்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம்

# நிலம் இருந்தும் வளம் இல்லாதோர் வளம் பெற வழிவகை

(பா.சதீசன்)

விசுவமடு கிராம மக்களுக்கான 50 ஆயிரம் ரூபா வட்டியில்லாக் கடன் வழங்கும் நிகழ்வு நேற்றையதினம் விசுவமடு கிழக்கு அட்டைக்குளம் சிறுவர் பூங்காவில் இடம்பெற்றது.

பொருளாதார ரீதியாக பின்னடைவைச் சந்தித்த மக்களை முன்னோக்கிக் கொண்டு செல்லும் நோக்கோடு நிலம் இருந்தும் வளம் இல்லாத மக்களை வளப்படுத்தும் வகையில்

தெரிவு செய்யப்பட்ட விவசாயம், பயிர்ச்செய்கை செய்யும் 19 பயனாளிகளுக்குத் தலா ஐம்பதாயிரம் ரூபா விகிதம் வட்டி இல்லா கடனாக 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நேற்றையதினம் மாலை வழங்கி வைக்கப்பட்டது.

விசுவமடு கிழக்கு, மேற்கு பகுதிகளில் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விசுவமடு கிராம மக்களுக்கு சுழற்சி முறையில் வட்டி இல்லாக் கடன் வழங்கப்பட இருக்கின்றது. அத்தோடு பாடசாலை மாணவர்கள், முதியோர்கள், விவசாயிகளுக்கான திட்டங்களும் முன்னெடுக்கப்பட இருக்கின்றன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வே. கரிகாலனின் நெறிப்படுத்தலுடன் அன்பாலயம் அமைப்பினரின் நிதி அனுசரணையோடு விசுவமடு கிராம மக்களின் ஒழுங்குபடுத்தலில் ஆரம்பமான இந்த நிகழ்வில் விசுவமடு கிழக்கு கிராமசேவையாளர் வி.கோணேஸ்வரன், திட்ட இணைப்பாளர் தீ.அனுஸ்ரியா, பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.





# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு எதிராகக் கட்டாய தடுப்புக்காவல் மற்றும் ஒடுக்குமுறைகள்

## ஐ.நா. குழுவின் அறிக்கையாளர்கள் தீவிர கரிசனை

வலிந்து காணாமல் ஆக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு எதிரான கட்டாய தடுப்புக்காவல் மற்றும் ஒடுக்குமுறைகள் தொடர்பில் வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் குழுவின் அறிக்கையாளர்கள் தீவிர கரிசனையை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடருக்கு சமாந்தரமாக வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் தொடர்பான குழுவின் 29 ஆவது கூட்டம் கடந்த 22 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. இந்தக் கூட்டத்தில் கடந்த 26 - 29 ஆம் திகதி வரை இலங்கை விவகாரம் குறித்து ஆராயப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் இலங்கை சார்பில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெகநாதன் தற்பரன், அந்த அலுவலகத்தின் உறுப்பினர் அஜித் தென்னக்கோன், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினர் நேரடியாகக் கலந்துகொண்டதுடன் வெளிவிவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு, பொலிஸ் திணைக்களம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளடங்கலாக இந்த விவகாரத்துடன் தொடர்புடைய கட்டமைப்புக்களின் பிரதிநிதிகள் கொழும்பில் இருந்து நிகழ்நிலை முறைமையில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்படல்களில் இருந்து சகல நபர்களையும் பாதுகாத்தல் தொடர்பான சர்வதேச பிரகடனத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவான அரச சட்டங்கள் தொடர்பில் தமது பாராட்டை வெளிப்படுத்திய விசேட அறிக்கையாளர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு எதிரான கட்டாய தடுப்புக்காவல் மற்றும் ஒடுக்குமுறைகள் தொடர்பில் தீவிர கரிசனையை வெளியிட்டனர்.

குறிப்பாக அங்கு கருத்துரைத்த வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் தொடர்பான குழுவின் பிரதித் தலைவரும் இணை அறிக்கையாளருமான ஒலிவியர் டி ப்ரொவில், வலிந்து காணாமல் ஆக்கப்படல்களால் இலங்கை பாதிக்கப்பட்டிருப்பதாகவும் 1980 மற்றும் 1990 களிலும், 2009 ஆம் ஆண்டு வரையான போர் இடம்பெற்ற காலப்பகுதியிலும் அத்தகைய சம்பவங்கள் பதிவானதாகவும் தெரிவித்தார். அதேவேளை வலிந்து காணாமல் ஆக்கப்படல்களில் இருந்து சகல நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச பிரகடனத்தில் கையெழுத்திட்டமை, இந்த விவகாரம் சார்ந்த தேசிய சட்டங்களை உருவாக்கியமை மற்றும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தை ஸ்தாபித்தமை என்பன உள்ளடங்கலாக அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கவை என்றும், விசேடமாக வலிந்து காணாமல் ஆக்கப்படல் தொடர்பான சட்டமானது சர்வதேச பிரகடனத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பெரிதும் உகந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று அண்மைய சில வருடங்களில் வலுகட்டாயமாகத் தடுத்துவைக்கப்படல் மற்றும் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு, குறித்த காலம் தடுத்து வைக்கப்படல் உள்ளிட்ட குறுங்கால வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் ஆகிய சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவ்வாறான தடுத்து வைப்புக்களைப் பொலிஸார் முடிவுக்குக் கொண்டு வருவதை அரசு எவ்வாறு உறுதிப்படுத்தும்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அடுத்தாகக் கருத்துரைத்த இணை அறிக்கையாளர் கார்மென் ரோஸா வில்லா குயின்ரனா, வலிந்து காணாமல் ஆக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினர் அரசின் கண்காணிப்புக்கள் மற்றும் ஒடுக்குமுறைகள் மூலம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகப்படுவதாகவும், இவ்வாறான சில சம்பவங்களில் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கு பொலிஸார் மறுத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இரட்டை வேடம்

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்டவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் இனவழிப்பு நடவடிக்கைகள் தொடர்பான விவகாரம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் சூடு பிடிக்கும் சமயங்களில் எல்லாம் இலங்கை நல்ல பிள்ளை வேடம் போடும். பின்னர் அமர்வு முடிந்ததும் அதுவரை கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டு தன் கைவரிசையை அது காட்டும். இது வழமையாக நடைபெறும் திருவிழா தான்.

இம்முறையும் இலங்கை தொடர்பான முன்னைய தீர்மானம் முடிவுக்கு வந்த நிலையில், புதிய பிரேரணை கொழும்புக்கு அழுத்தம் தரும் விதத்தில் விவாதத்துக்கு வருகின்றது. போதாக் குறைக்கு இந்தச் சமயத்தில் செம்மணி மனிதப் புதைக்குழி தொடர்பான விவகாரம் பூதாகர வடிவம் எடுத்திருக்கிறது.

அதனால் அந்த அகழ்வுப் பணிகளுக்கும், அங்கு பல நூற்றுக் கணக்கில் மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகளை அடையாளம் காணும் நடவடிக்கைகளுக்கும் சர்வதேச உதவிகளையும் பங்களிப்புக்களையும் பெற்றுக் கொள்ளப் பின்னிற்க மாட்டோம் என்று ஐ.நா. உட்பட சர்வதேச மட்டத்தில் நடைபெறும் கலந்துரையாடல்களில் நாடகமாடுகிறது இலங்கை.

மனிதப் புதைகுழிகளை அகழும் விடயத்தில் அரசு முழுமையான ஒத்துழைப்பை நேர்மையாக வழங்கும் என்றும் சர்வதேச மட்டத்தில் உறுதிமொழிகள் கொடுக்கப்பட்டன. ஆனால் நடைமுறையில் அரசாங்கத்தின் பம்மாத்து போக்கு வெளிப்படத் தொடங்கி இருக்கிறது.

இங்கு களத்தில் யாழ்ப்பாணம் – அரியாலை, சித்துப்பாத்தி பகுதியில் உள்ள செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு, அடுத்த கட்ட அகழ்வுப் பணிக்கான அரசின் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, அடுத்த கட்ட அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதி தொடர்பான அறிவிப்புகள் எதுவும் கிடைக்கப் பெறாமையினால், வழக்கை எதிர் வரும் 13ஆம் திகதிக்கு நீதிவான் தவணையிட்டுள்ளார். இந்நிலையில் நிதி கிடைத்தவுடன் அகழ்வுப் பணிகளைத் தொடர்வது குறித்து தீர்மானிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

வடக்கு இலங்கையில் எந்நேரமும் மழைக்காலம் தொடங்கலாம் என்ற நெருக்கடி உள்ளது. மழைகாலம் சூடு பிடித்தால் செம்மணி புதைகுழி அகழ்வுப் பணி இப்போதைக்குச் சாத்தியமற்றுப் போய் விடும். அது, மழைக்காலம் முடிந்த பின்னர் - அதுவும் பெரும்பாலும் தைப்பொங்கலுக்கு பின்னரே - இனிமேல் சாத்தியமாகும் என்ற நெருக்கடி நிலையை உருவாக்கும்.

இந்த மாதங்களில் இரண்டு வாரத்துக்கு இந்தப் புதைகுழி அகழ்வுப் பணியை ஒத்திவைப்பது என்பது மிக மோசமான காலதாமதத்தை ஏற்படுத்த வல்லது. புதைகுழி அகழ்வுக்கு முழு ஒத்துழைப்பு, உதவி, ஒத்தாசை வழங்குவோம் என்று சர்வதேச மட்டத்தில் உறுதியளித்த கொழும்பு, இப்போது அந்தப் புதைகுழி அகழ்வுப் பணிக்குரிய நிதியை ஒதுக்காமல் காலதாமதம் பண்ணுவதன் மூலம் அகழ்வுப் பணியை மழைக்காலத்தை நோக்கி இரண்டு வாரம் தள்ளி வைக்கும் கட்டாயத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

கொழும்பின் இரட்டை வேட நாடகத்தின் ஓர் அங்கம்தான் இந்த நடவடிக்கை.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் அதற்கான ‘பவர் பாங்க்’ போன்றவை தொடர்பில் தொழில்நுட்ப பாட ஆசிரியர் ஒருவர் விசாரணை நடத்தியமையினால் அந்த மாணவனினால் அந்த ஆசிரியர்நையப்புடைக்கப்பட்டுகாயமுற்றநிலையில் மொனறாகலை ஆஸ்பத்திரியில் நேற்று சேர்க்கப்பட்டிருக்கிறார். மொனறாகலை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகிறார்கள்..

அடுத்து இலங்கையின் சட்ட நடைமுறையாக்கம் தொடர்பான இரண்டு தகவல்கள்.

இலங்கை முழுவதும் உள்ள பத்து சிறைச்சாலைகளில் மொத்தம் 39 குழந்தைகள் தங்கள் தாய்மார்களுடன் வசித்து வருகின்றன (சிறை வாழ்வு வாழ்ந்து வருகின்றன) என சிறைச்சாலைகள் துறை தெரிவித்துள்ளது.

“இந்தப் பிரச்சினை அற்பமாகத் தோன்றினாலும், தேசிய அளவில் இது ஒரு தீவிரமான கவலையாகும்.” – என சிறைச்சாலை ஆணையர் ஜகத் வீரசிங்க கூறுகின்றார்.

இந்த 39 குழந்தைகளில் 17 பேர் சிறுவர்கள், 22 பேர் சிறுமிகள்.

வெலிக்கடையில் –16 பேர், அகுனகொலபெலஸ்ஸவில் – நால்வர், அநுராதபுரத்தில் – ஒருவர், திருகோணமலையில் – மூவர், களுத்துறையில் – அறுவர், மட்டக்களப்பில் – இருவர், நீர்கொழும்பில் – நால்வர், பதுளையில் – ஒருவர், வாரியபொலவில் – ஒருவர் மற்றும் யாழ்ப்பாணத்தில் – ஒருவர் என பத்துச் சிறைகளில் மொத்தம் 39 அப்பாவிச் சிறார்கள் தங்கள் தாய்மாரின் குற்றங்களுக்காக சிறை வாழ்வு வாழ்கின்றனர்.

சிறைச்சாலை சூழல் குழந்தைகளுக்கு ஏற்படுத்தும் தாக்கம் குறித்து அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். இதுபோன்ற சூழ்நிலைகளில் வாழ்வது அவர்களின் மன ஆரோக்கியத்தை எதிர்மறையாக பாதிக்கும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நாடு முழுவதும் தற்போது 1,529 பெண் கைதிகள் உள்ளனர், இதில் 225 பேர் தண்டனை பெற்ற கைதிகள் மற்றும் 1,304 பேர் தடுப்புக் காவலில் உள்ளனர். அவர்களில், 19 பெண்கள் மரண தண்டனையில் உள்ளனர். 24 பேர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்கள்.

இலங்கையில் குற்றவியல் சட்ட நடைமுறையாக்கம் தொடர்பில் இன்னொரு சம்பவம்:–

இரண்டு சொக்லேட்டுகளைத் திருடினார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டில் 26 வயதுத் தாயும் அவரது இரண்டரை மாத சிசுவும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

நேற்று முன்தினம் கந்தர பொலிஸ் நிலைய அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் தாயும் குழந்தையும் மாத்தறை பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர், அங்கு அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

அந்தப் பெண் மற்றும் அவரது குழந்தையின் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் பிணை வழங்க மறுக்கும் நீதிவானின் முடிவை ஆட்சேபித்தார். நீதிமன்றத்திற்கு விளகமறியலில் வைக்க உத்தரவிடும் முழு அதிகாரம் இருந்தபோதிலும், தாயை விளக்கமறியலில் வைப்பது குழந்தைக்கு கடுமையான அநீதியை விளைவிக்கும் என்று அவர் வாதிட்டார்.

ஆனால் அந்த வாதம் அம்பலம் ஏறவில்லை.

நல்ல நாடு, நல்ல சட்டங்கள், நல்ல நீதி.... ஆண்டவனாலும் இந்த நாட்டைக் காப்பற்ற முடியாது...!

## அகழ்வுப் பணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிக்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறாதமையாலேயே இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று புதன்கிழமை நீதிவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிக்கான பாதீட்டுக்கான அங்கீகார அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்க அரச சட்டத்தரணி கால அவகாசம் கோரினார். இதைத் தொடர்ந்தே வழக்கு எதிர்வரும் 13ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணி கடந்த மாதம் 6ஆம் திகதி நிறைவடைந்தது. 3 கட்டங்களாக 54 நாட்கள் நடைபெற்ற அகழ்வுப் பணிகளில் 240 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டு 239 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

இதேவேளை, அந்தப் பகுதியில் இன்னமும் எலும்புக்கூடுகள் இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இதையடுத்து, அங்கு 8 வார காலம் ஆய்வைத் தொடர்வதற்குச் சட்ட மருத்துவ அதிகாரி செ.பிரணவன் நீதிமன்றிடம் கோரிக்கை வைத்தார். இதற்கான பாதீட்டு அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தாஜுதீனின் மரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஊடகங்களுக்குப் பேட்டியளித்த நாமல் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

“தாஜுதீனின் மரணம் குறித்த தற்போதைய கவனத்தை அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கடந்த கால நிகழ்வுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து, சிலர் அதைத் தனிப்பட்ட அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் குறிக்கின்றது.

இருப்பினும், வழக்கின் அனைத்து தொடர்புடைய விவரங்களும் முழுமையாக ஆராயப்பட வேண்டும்.

‘கஜ்ஜா’ என்ற நபரின் குடியிருப்பு, கூட்டாளிகள் மற்றும் நடமாட்டங்களை அதிகாரிகள் கவனிக்க வேண்டும்.

அரசியல் காட்சியை உருவாக்காமல், தாஜுதீன் ஏதேனும் அநீதியை எதிர்கொண்டாரா என்பதை அதிகாரிகள் விசாரிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவது அவரது நினைவுக்கு அநீதி இழைப்பதாகும்.” – என்றார்.

## தாஜுதீனின் கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

2012இல் கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் யாராயினும் சட்டம் செயற்படுத்தப்படும்.

இந்தக் குற்றம் தொடர்பான விசாரணைகளில் அரசு தலையிடாது.” – என்றார்.

## முகமாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

குடும்பஸ்தர் ஒருவர் தமது வீட்டைச் சுத்தம் செய்யும் போது பள்ளம் தோண்டியுள்ளார். அதன்போது கிடங்கினுள் ஆபத்தான நிலையில் வெடிக்காத குண்டுகள் காணப்பட்டுள்ளன.

அது தொடர்பில் உடனடியாக வீட்டு உரிமையாளர் பளை பொலிஸார்க்கு அறிவித்தார்.

அறிவித்தலில் அடிப்படையில், சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், அந்தக் குண்டுகளை மீட்பதற்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் அனுமதியைப் பெற்று அவற்றை மீட்டுச் சென்றுள்ளனர்.

















# பருத்தித்துறை முனை கடற்கரையில் சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டது



பருத்தித்துறை நகர பிதா வின்சன்டி போல் டக்ளஸ் போலின் வேண்டுகோளின் அடிப்படையில் தனுசா மரைன் நிறுவனத்தினரது அனுசரணையில் பருத்தித்துறை நகர சபையின் பூரண ஒத்துழைப்புடன் பருத்தித்துறை முனை கடற்கரை திடலில் அமைத்துக் கொடுக்கப்பட்ட சிறுவர் பூங்கா நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தனுசா மரைன் நிறுவன பொறுப்பதிகாரி மற்றும் நகர பிதாவினால் மேற்படி சிறுவர் பூங்காவிற்கான பெயர் பலகையினை திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

இதன்போது பங்கேற்றிருந்த சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை நகரசபை செயலாளர் திருமதி தாரணி காந்தரூபன், தனுசா மரைன் நிறுவன பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர், நகரசபை உறுப்பினர்கள், சிறுவர்கள், பெற்றோர், பொதுமக்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.















# பருத்தித்துறை ஆத்தியடி முன்பள்ளியில் சிறப்பாக இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்வு

பருத்தித்துறை ஆத்தியடி சைவ மன்ற முன்பள்ளி சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

முன்பள்ளி வளாகத்தில் முன்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் திருமதி ஜெயமீரா பிரதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கிருஷ்ணலதா குலசங்கர் பிரதம விருந்தினராக பங்கேற்று சிறப்பித்திருந்தார்.

சிறப்பு விருந்தினர்களாக சமாதான நீதவான் பல்துறை சமூகசேவை சமூக சேவையாளரும் கந்தமுருகேசனார், மாதிரி முன்பள்ளி முகாமைத்துவ குழு தலைவருமான முருகேசப்பிள்ளை ஜெயதேவன் தம்பதியரும், கௌரவ விருந்தினர்களாக சமூக சேவையாளர் கிருஷ்ணபிள்ளை விஜயதான் தம்பதியர், சமூக சேவையாளர் யோகப்பிள்ளை குணராஜா தம்பதியரும் பங்கேற்று சிறப்பித்திருந்தனர்.

விருந்தினர்கள் மலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டு மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

வரவேற்பு நடனத்தை தொடந்து தமிழர் கலை, கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையிலான நடனம், காவடி ஆட்டம், கரகாட்டம், பேச்சுகளை முன்பள்ளி சிறார்கள் மிகவும் சிறப்பான முறையில் நிகழ்த்தியிருந்தனர்.

தலைமை உரை, பிரதம விருந்தினர் உரை என்பன இடம்பெற்று நிறைவாக முன்பள்ளி சிறார்களுக்கு சின்னம் சூட்டப்பட்டு இனிப்பு மாலை அணிவிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் முன்பள்ளி சிறார்களின் குடும்பத்தவர்கள், உறவினர்கள் மற்றும் சமூக ஆர்வல்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.











# ஜப்பானின் பேரரசருடன் ஜனாதிபதி அநுர சந்திப்பு

ஜப்பான் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஜப்பான் பேரரசர் நரு ஹிதோவை சந்தித்தார்.

பேரரசர் மாளிகையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

டோக்கியோவிலுள்ள ஜப்பான் பேரரசர் மாளிகைக்கு சென்ற ஜனாதிபதியை பேரரசர் வரவேற்றதுடன் சுமூகமான கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

ஜப்பானின் அழைப்பிற்கிணங்க கடந்த 27ஆம் திகதி பயணம் செய்த ஜனாதிபதி, அந்நாட்டு பிரதமர் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகளை சந்தித்ததுடன் அந்நாட்டின் வர்த்தகக்குழுவினரையும் அங்கு வசிக்கும் இலங்கையர்களையும் சந்தித்தார்.

இதேவேளை, உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று காலை நாடு திரும்பினார்.







# மேல் மாகாண ஆட்டோ பதிவு

மேல் மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்து சேவையாக செயல்படும் ஆட்டோக்களின் பதிவு மேற்று முதல் மீண்டும் ஆரம்பமாகியது.

2025 டிசம்பர் 31 வரை ஆட்டோக்களின் பதிவு தொடரும் என மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் காமினி ஜாசிங்கே அறிவித்துள்ளார்.

தற்போது, மேல் மாகாணத்தில் 250,000 இற்கும் மேற்பட்ட ஆட்டோக்கள் பயணிகள் போக்குவரத்து சேவையாக செயல்படுகின்றன என்று அவர் தெரிவித்தார்.

மேல் மாகாணத்திற்குள் சேவையில் ஈடுபடும் எந்த மாகாணத்தைச் சேர்ந்த சாரதிகளும் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.



# பஸ் கட்டணம் குறைக்கப்பட மாட்டாது போக்குவரத்து ஆணைக்குழு அறிவிப்பு



டீசல் விலை குறைக்கப்பட்ட போதிலும் பஸ் கட்டணம் குறைக்கப்பட மாட்டாதென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பஸ் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின், டீசல் விலை குறைந்தது 4 வீதத்தால் குறைக்கப்பட வேண்டுமெனவும் இம்முறை 1.58 வீதத்தால் விலை குறைக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் பீ.ஏ.சந்திரபால தெரிவித்தார்.

ஓகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் டீசல் விலை தலா 6 ரூபா வரை குறைக்கப்பட்டது. டீசல் விலை 277 ரூபாவாகும்.

# சமையல் எரிவாயுகளின் விலையில் மாற்றம் இல்லை




ஒக்டோபர் மாதத்தில் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையில் எந்த திருத்தமும் மேற்கொள்ளப்படமாட்டாது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோகிராம் எரிவாயுவின் விலை 3,690 ரூபாவாகவும், 5 கிலோகிராம் எரிவாயுவின் விலை 1,482 ரூபாவாகவும், 2.3 கிலோகிராம் எரிவாயுவின் விலை .694 ரூபாவாகவும் காணப்படுகிறது.

இதேவேளை, ஒக்டோபர் மாதத்தில் லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலையில் எந்த திருத்தமும் மேற்கொள்ளப்படமாட்டாது என லாப்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி 12.5 கிலோ எடையுள்ள லாப்ஸ் எரிவாயு விலை 4,115 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

# ஒன்றரை லட்சம் சுற்றுலாப் பயணிகள் செப்ரெம்பர் மாதம் நாட்டிற்கு வருகை



இந்த ஆண்டின் செப்டெம்பர் மாதத்தில் 148,673 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர்.

அவர்களில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர்.

அதன்படி, இந்த ஆண்டு இதுவரை நாட்டிற்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,715,196 ஆக அதிகரித்துள்ளது.

இதற்கிடையில், ஒகஸ்ட் மாதத்தில் சுற்றுலா வருவாய் மூலம் இலங்கை 259 மில்லியன் அமெரிக்க டொலர் பெற்றதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# 159 பேருடன் பெரும்பான்மை இருந்தும் அரசாங்கத்தினால் எந்த பயனும் இல்லை

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



நாட்டின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு 159 பேருடன் பெரும்பான்மைபலம்கொண்டஅரசாங்கம்இருந்தும், மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

அனுராதபுரம் கலாவெவ பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், மக்கள் தற்போது தமது குறைபாடுகளை அதிகாரம் இல்லாத எதிர்க்கட்சித் தலைவரிடமே முன்வைக்கின்றனர் என தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“லட்சக்கணக்கான வாக்குகளுடன் அதிகாரத்தை வழங்கிய போதும், அரசாங்கம் மக்களுக்கு எதிர்பார்த்த பதிலையோ, தீர்வையோ வழங்கவில்லை.

யானை-மனித மோதல் போன்ற பிரச்சினைகள் ஒரே கையெழுத்தில் தீர்க்கப்படும் எனக் கூறப்பட்ட போதிலும், இதுவரை எதுவும் நடக்கவில்லை.

விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்துப் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பினால், ஆளும் தரப்பினர் வாயை அடைக்க முயற்சிக்கின்றனர்.

எவ்வாறாயினும், மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எதிர்க்கட்சி அனைத்து வழிகளிலும் தலையிடும்.” - என்றார்.



# விஜய்யின் பிரசாரம் 2 வாரங்களுக்கு ரத்து

## த.வெ.க. அறிவிப்பு

கடந்த சனிக்கிழமை கரூரில் நடந்த விஜய்யின் பிரச்சாரத்தின் போது கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த நிலையில், அடுத்த 2 வாரங்களுக்கான மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்படுகின்றன என தமிழக வெற்றிக் கழகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து த.வெ.க. தலைமை நிலையச் செயலகம் வெளியிட்ட அறிவிப்பில்,

"நம் சொந்தங்களை இழந்த வேதனையிலும் வருத்தத்திலும் நாம் இருக்கும் இச்சூழலில், நம் கழகத் தலைவரின் அடுத்த இரண்டு வாரங்களுக்கான மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியானது தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகிறது. இந்த மக்கள் சந்திப்பு தொடர்பான புதிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்பதை நம் கழகத் தலைவரின் ஒப்புதலோடு தெரிவித்துக்கொள்கிறோம்." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

த.வெ.க. தலைவர் விஜய், சனிக்கிழமை தோறும் பிரச்சாரம் மேற்கொள்ளவர் என அக்கட்சி அறிவித்தது.

அதன்படி சுற்று பயண விவரங்கள் குறித்த அறிவிப்பும் வெளியானது. திருச்சி, அரியலூர், நாகை, திருவாரூர் உள்ளிட்ட பகுதிகளை முதல் 2 வாரங்கள் அவர் சுற்றுப் பயணம் செய்திருந்தார்.

இந்நிலையில், கடந்த சனிக்கிழமை நாமக்கல் மற்றும் கரூரில் அவர் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

இந்த சூழலில்தான் கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்துக்கு பிறகு விஜய்யின் சுற்றுப்பயணம் 2 வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக த.வெ.க. அறிவித்துள்ளது.

# விஜய் சுயமாக சிந்திக்கவில்லை உசுப்பேற்றி பேச வைத்துள்ளனர்

## திருமாவளவன் கருத்து




"கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு தொடர்பாக விஜய் வெளியிட்ட காணொலியில் அவர் சுயமாக சிந்தித்து பேசினார் என்று தெரியவில்லை. அவரை சுற்றிலும் உள்ளவர்கள் உசுப்பேற்றி இதுபோல பேச சொல்லியுள்ளனர்."

– இவ்வாறு விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த திருமாவளவன்,

"செந்தில் பாலாஜி மட்டுமே குற்றவாளி என்று விஜய் சொல்ல விரும்புகிறாரா? அவர் என்ன வகையான குற்றங்களை செய்தார் என சொல்கிறார். 'ஆட்களை அனுப்பினாரா? கல் எறிந்தாரா? அதனால் தடியடி நடத்தப்பட்டு கூட்ட நெரிசல் ஏற்பட்டதா?' இதெல்லாம் அரசியல் நேர்மையற்ற குற்றச்சாட்டு. இது கூட்ட நெரிசல் உயிரிழப்புகள்தான்.

ஒரு சதுர மீற்றரில் 4 அல்லது 5 பேர்தான் நிற்க முடியும். அங்கே 10 முதல் 15 பேர் நின்றிருக்கிறார்கள். 10 மணி நேரம் காத்திருக்கிறார்கள். அதனால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது. இது 100 சதவீதம் கண்கண்ட உண்மை. அதனை மறைத்து சதி என்று சொல்வதும், தி.மு.க. அரசு மீது பழி போடுவதும் ஆபத்தான அரசியல். அவருக்கே இது நல்லதல்ல.

விஜய் இதனை சுயமாக சிந்தித்து சொன்னதாக தெரியவில்லை. அவரை சுற்றிலும் உள்ளவர்கள் உசுப்பேற்றி இதுபோல பேச சொல்லியுள்ளனர். விஜய் எப்போது சுயமாக சிந்தித்து செயல் திட்டங்களை வரையறுக்கிறாரோ, அப்போது தான் அவருக்கு நல்ல அரசியல் எதிர்காலம் உருவாகும்.

பா.ஜ.க. தரப்பிலிருந்து ஒரு குழு வந்துள்ளது. அதற்கான தேவை என்ன? விஜய் மீது தவறு இல்லை, அரசு மீதுதான் தவறு என உடனடியாக அண்ணாமலை பேசுகிறார். இது அவர்களுக்கே எதிராக முடியும். எங்கள் கட்சி தொண்டர்கள் எல்லாம் கூட்டத்தில் "அம்புலன்ஸ்" வந்தால், வழிவிட்டு நிற்பார்கள். "அம்புலன்ஸ்கள்" நோயாளியை அழைக்க செல்லும்போது ஆள் இல்லாமல்தான் போகும். பின்னர் நோயாளியை ஏற்றி ஆளோடு செல்வார்கள். இதெல்லாம் என்ன பேச்சு. இது நாகரீகமான அரசியலா?." எனக் கேள்வியை முடிப்பியுள்ளார்.

# த.வெ.க செயலாளர் புஸ்லி ஆனந்தை கைது செய்ய தனிப்படை அமைப்பு



தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் மற்றும் அக்கட்சியின் மாநில இணைச் செயலாளர் நிர்மல் குமாரை கைது செய்ய மத்திய மண்டல பொலிஸ் தனிப்படை அமைத்துள்ளது.

இந்த உத்தரவை மத்திய மண்டல பொலிஸின் தலைவர் ஜோஷி நிர்மல் குமார் பிறப்பித்துள்ளார்.

கரூர் வேலுசாமிபுரத்தில் நடைபெற்ற தவெக பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இது தொடர்பாக கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர் வி.பி.மதியழகன், பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், மாநில இணைச் செயலாளர் நிர்மல்குமார் ஆகியோர் மீது கரூர் நகர பொலிஸார் 5 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இதில் தலைமறைவாக இருந்த மாவட்டச் செயலாளர் மதியழகன், அவருக்கு அடைக்கலம் கொடுத்த கட்சி நிர்வாகி பவுன்ராஜ் ஆகியோரை திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறையில் தனிப்படை பொலிஸார் கடந்த 29 ஆம் திகதி கைது செய்தனர். அவர்கள் இருவரையும் நேற்று முன்தினம் கரூர் குற்றவியல் நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்தினர். தொடர்ந்து அவர்கள் இருவருக்கும் 15 நாள் நீதிமன்ற காவல் அறிவித்தார் நீதிபதி பரத்குமார்.

இந்நிலையில், கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு விவகாரத்தில் புஸ்ஸி ஆனந்த் மற்றும் நிர்மல் குமாரை கைது செய்ய மத்திய மண்டல பொலிஸ் தனிப்படை அமைத்துள்ளது.

# போரை நிறுத்திவிட்டேன் நோபல் பரிசு தரவேண்டும்

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு



தனக்கு நோபல் பரிசு தராவிட்டால் அது அமெரிக்காவுக்கு அவமானம் ஆகிவிடும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகள் இடையே நடைபெற்ற 7 போர்களை நிறுத்தி விட்டதாக கூறி வரும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ரஷ்யா, உக்ரைன் போரையும் எப்படியும் நிறுத்திவிடுவேன் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகள் இடையே அமைதியைநிலைநாட்டியதற்குதனக்குநோபல் பரிசு தர வேண்டும் என ட்ரம்ப் பிடிவாதமாக இருக்கின்றார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆனாலும் நோபல் பரிசு உண்டா இல்லையா என்பது பற்றிய எவ்வித தகவல்களும் இதுவரை வெளியாகவில்லை.

மேலும், "நான் இஸ்ரேல் – காசா போரை நிறுத்திவிட்டேன், நாங்கள் அதை சரி செய்துவிட்டோம். ஹமாஸ் அதை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்.

அப்படி ஏற்காவிட்டால் அவர்களுக்கு மிகவும் கடினமானதாக இருக்கும்.

எனவே எனக்கு நோபல் பரிசு தர வேண்டும். நோபல் பரிசு தரவில்லை என்றால் அது அமெரிக்காவுக்கு அவமானம் ஆகிவிடும்." என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.






# பிரான்ஸுக்கான தென்னாப்பிரிக்கத் தூதுவர் பாரிஸில் விடுதிக்கு வெளியே சடலமாக மீட்பு

பிரான்ஸுக்கான தென்னாப்பிரிக்கத் தூதுவர் எங்கோசினதி எம்மானுவேல் ம்தேத்வா, பாரிஸில் உள்ள ஹையாட் ரீஜென்சி விடுதிக்கு வெளியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் தமது உயிரை மாய்த்துக் கொண்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள பிரான்ஸ் அதிகாரிகள். விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பிரான்ஸ் நேரப்படி நேற்று முன் தினம் காலை 11 மணியளவில் விடுதியின் முற்றத்தில் தூதுவரின் உடல் கண்டு பிடிக்கப்பட்டது.

அவர் அந்த விடுதியில் 22 ஆவது மாடியில் அறையை முன்பதிவு செய்திருந்ததார் எனவும் அந்த அறையின் ஜன்னல் கத்திரிக்கோல் மூலம் திறக்கப்பட்டிருந்ததாகவும் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் நடப்பதற்கு முந்தைய நாள் இரவு, தூதுவர் தனது மனைவிக்கு ஒரு செய்தியை அனுப்பியுள்ளார் எனவும் அதில் அவர் மன்னிப்புக் கேட்டு உயிரை மாய்த்துக்கொள்ளும் எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்தில் எந்தவிதமான குழப்பத்துக்கான அல்லது போதைப் பொருள் பாவனைக்கான தடயங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# டிசம்பரில் இந்தியா செல்கின்றார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்



எதிர்வரும் டிசம்பர் மாதம் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்தியாவுக்கு செல்லவுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டிசம்பர் 5 ஆம் மற்றும் 6 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள அவர் செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலின் ரஷ்ய பயணத்தின் போது, புடின் இந்திய வருகையில் இணைவார் என்று குறிப்பிடப்பட்டது, ஆனால் நேரம் குறித்து எந்த அதிகாரபூர்வ குறிப்பும் இல்லை.

இருப்பினும், சமீபத்தில் சீனாவில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் மோடியும் ரஷ்ய ஜனாதிபதியும் சந்தித்தனர்.

இரு தலைவர்களும் ஒரு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தியா ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அமெரிக்கா ஏற்கனவே இந்தியா மீது வரிகளை விதித்துள்ளது.

இதுபோன்ற சூழலில், ரஷ்ய ஜனாதிபதியின் வருகை இந்திய – அமெரிக்க இருதரப்பு உறவுகளை மேலும் பாதிக்கும் என்று கூறப்படுகிறது.






# உடையார்கட்டு வெள்ளப்பள்ளம் குளத்திற்குள் சட்டவிரோதமாக வெட்டி அழிக்கப்பட்ட மரங்கள்

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தும் ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட உடையார்கட்டு வெள்ளப்பள்ளம் குளத்தினுள் சட்டவிரோதமாக பாரிய அளவில் மரங்கள் வெட்டப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று அந்த இடத்திற்கு நேரடியாகச் சென்று நிலமைகளை ஆராய்ந்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், சட்டவிரோதமாக மரங்களை வெட்டியவர்களுக்கெதிராக விரைந்து நடவடிக்கைகளை எடுக்குமாறு வெள்ளப்பள்ளம் கிராமஅலுவலர், உடையார்கட்டு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசசெயலாளர் ஆகியோரை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ௵ேம் கூறப்படுவதாவது :–

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட உடையார்கட்டு வெள்ளப்பள்ளம் பகுதியில் அமைந்துள்ள வெள்ளப்பள்ளம் குளக்காணியில் உள்ள நீர்மரங்கள் பாரிய அளவில் சட்டவிரோதமாக வெட்டப்பட்டுள்ளன.

வெள்ளப்பள்ளம் குளத்தின் அருகிலுள்ள ஒருங்கிணைந்த பண்ணையின் உரிமையாளரினாலேயே இவ்வாறு நீர்மரங்கள் பாரியளவில் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில் இதுகுறித்து அப்பகுதி மக்களின் முறையீட்டிற்கு அமைவாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று நிலமைகளைப் பார்வையிட்டார்.பிரச்சினை தொடர்பாக  மக்களிடம் கேட்டறிந்துகொண்டார்.

உடையார்கட்டு கமநல சேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட வெள்ளப்பள்ளம் குளத்தின் அருகிலுள்ள ஒருங்கிணைந்த பண்ணையின் உரிமையாளர் ஏற்கனவே அந்த வெள்ளப்பள்ளம் குளத்திற்குரித்தான பெருமளவான பகுதிகளை ஆக்கிரமித்துள்ளார் எனக் கிரமமக்களால் முறையீடு செய்யப்பட்டது.

இந்நிலையில் அதன் தொடர்சியாகவே அவர் குளத்தின் எஞ்சிய பகுதிகளையும் ஆக்கிரமிக்கும் நோக்கிலேயே இவ்வாறு மரங்களை வெட்டியிருக்கலாமெனவும் கிராமமக்களால் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு இவ்வாறு குளத்தின் பகுதிகளிலுள்ள நீர் மரங்கள் பெருமளவு அழிக்கப்பட்டமையால் நிலத்தடி நீர் அற்றுப்போகும் அபாயம் ஏற்படுமெனவும், அருகிலுள்ள கிணறுகளில் நீரின்றிப்போகுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் எஞ்சிய குளத்தின் பகுதிகளும் தனிநபரினால் ஆக்கிரமிக்கப்பட்டால் அப்பகுதி கால்நடைகளுக்கு குடிநீரில்லாமல் போகும் அபாயம் ஏற்படுமெனவும் மக்களால் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

குளத்தின் காணிகளுக்குள் சட்டவிரோதமாக மரங்கள் பாரிய அளவில் வெட்டி அழிக்கப்பட்டமைக்கு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டபோதும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளனர் எனவும் மக்களால் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் முறையீடும் செய்யப்பட்டது.

அதேவேளை இவ்வாறு குளக்காணிக்குள் சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்பட்டமைக்கு விரைந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கிராம மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கு இதன்போது மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் உடனடியாக உடையார்கட்டு கமநலசேவைநிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் வெள்ளப்பள்ளம் பகுதிக்குரிய கிராம அலுவலர் ஆகியோரை அந்தப் பகுதிக்கு அழைத்தமையுடன், நிலைமைகளை காண்பித்து சட்டவிரோதமாக குளக்காணிக்குள் நீர்மரங்கள் வெட்டப்பட்டமைக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

அதேவேளை புதுக்குடியிருப்பு பிரதேசசெயலாளருக்கும் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு சட்டவிரோதமாக குளக்காணிக்குள் பாரிய அளவில் மரங்கள் வெட்டி அகற்றப்பட்டமைக்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தினர்.

இது குறித்து விரைந்து நடவடிக்கை எடுப்பார்கள் எனக் கிராமஅலுவலர், உடையார்கட்டு கமநலசேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசசெயலாளர் ஆகியோரால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## வீரதுர்க்கை துதி

# விஜய தசமி வெற்றியின் நாளே!

வீரமும் விவேகமும் வித்தையும் இணையும்
தாரக மந்திரம் சக்தியே ஆகும்
வளமும் தருவாள் வாழ்வும் தருவாள்
மண்ணும் விண்ணும் நிறைவாள் சக்தி

ஒன்பது நாளும் ஒவ்வொரு படியாய்
உயர்ந்திடும் ராத்திரி நவராத் திரியாகும்
பத்தாம் நாளில் பக்குவம் பெறுவோம்
அத்தினம் சக்தியின் ஆற்றலாய் எழுந்திடும்

வெற்றி என்பது சக்தியே ஆகும்
வீரமும் சக்தியே ஈரமும் சக்தியே
செல்வம் கல்வி அனைத்தும் சக்தியே
அனைத்தும் அமைந்தால் வெற்றியின் விஜயமே

ஆணவம் இருந்தால் அனைத்தும் அழியும்
ஆணவம் என்பதை அழிப்பவள் சக்தியே
ஆணவ அரக்கனை அழித்திடு நாளாய்
அமைவதே விஜய தசமியின் தத்துவம்



செல்வமும் கல்வியும் வீரமும் நிறைந்தால்
உள்ளே ஆணவம் உருவாகத் தொடங்கும்
ஆணவம் எழுந்தால் அழிவே நிச்சயம்
அதுவே விஜய தசமியின் தத்துவம்


சக்தியால் கிடைக்கும் சக்திகள் யாவும்
சரியான வழியில் பயன்பட வேண்டும்
மற்றவர் அழிவை மனமதில் கொண்டால்
சக்தியால் தண்டனை கிடைத்தே தீரும்

ஒன்பது நாளும் உயர்வுடை நாளே
உள்ளம் உருகி வழிபடல் வேண்டும்
பக்தியின் மயமாய் சக்தியைப் போற்றினால்
வெற்றிகள் நிச்சயம் சக்தியே கொடுப்பாள்

உள்ளம் உருகினால் உவப்பாள் சக்தி
கள்ளம் நிறைந்தால் கடிவாள் சக்தி
அள்ளி அணைக்கும் சக்தியின் நாளே
வெற்றியாம் விஜய தசமியே ஆகும்



- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி
இயக்குநர்,
மெல்பேண், ஆஸ்திரேலியா)




# சீரடி சாயி பாபாவின் மகா சமாதி தினம் இன்று கொழும்பு புதுச்செட்டித் தெரு சீரடிமந்திரிலில்

## சிந்தனைச் செம்மல் பி. மணிகண்டனின் சிறப்புரை நாளை

எஸ்..என். உதயநாயகம்
(தலைவர், சீரடி சாயி
மத்திய நிலையம், ஸ்ரீலங்கா)

மகான் ஸ்ரீ சீரடி சாயி பாபாவை குருவாக ஏற்றுக் கொள்ளும் பாக்கியம், ஒரு சிலருக்கு மட்டும்தான் கிட்டும். பாபா தன் சத்சரிதத்தில், 'சிட்டுக்குருவியின் காலில் நூல் கட்டி இழுப்பதுபோன்று, என் பக்தனை இழுப்பேன்' என்று சத்யவாக்கு கொடுத்திருக்கிறார். அப்படிப்பட்ட சிட்டுக்குருவியாக, அது நாமாக இருந்தால், அது நாம் செய்த புண்ணியமாகவும், முன்னைய பிறவியில் செய்த நல்ல பலனாகவும் இருக்கும்.

பாபாவை வணங்கும் நேர காலமும், அவரது மந்தீருக்குள் காலடி எடுத்து வைக்கும் சந்தர்ப்பமும் ஒரு தடவை கிடைத்துவிட்டால், அப்போது நீங்கள் அவரது சிட்டுக்குருவியாகி விட்டீர்கள் என்று அர்த்தம்.




முதலில் சீரடி சாயி பாபாவைக் குருவாக ஏற்று, அவர் மீது பூரண நம்பிக்கை வைக்க

தொடர்ச்சி ▼

# சீரடி சாயி பாபாவின் மகா சமாதி தினம் இன்று கொழும்பு புதுச்செட்டித் தெரு சீரடிமந்திரிலில்

தொடர்ச்சி ▲

வேண்டும். குரு வழிபாட்டில், சரணாகதி என்பது பூரணமாக எம்மை ஒப்படைப்பது. சந்தேகத் துடன் ஏதாவது ஒன்றை எதிர்பார்த்து வழிபடு வது, எங்களையே நாங்கள் ஏமாற்றுவதைப் போன்றது.

உதாரணத்துக்கு, ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது, நமது முழுப் பொறுப்பையும், பஸ்ஸை செலுத்திவரும் ஓட்டுநரான சாரதி யிடம் ஒப்படைத்துவிட்டு, ஜாலியாக அக்கம்பக்கம் காட்சிகளை ரசித்தபடி பயணம் செய்வதுண்டு. எக்காரணம் கொண்டும் அந்த பஸ் வண்டியைப் பற்றியோ அல்லது பஸ் ஓட்டுநர் பற்றியோ கவ லைப்படுவதில்லை. இந்த பஸ் ஒழுங்காக ஓடுமா? என்று சந்தேகத்துடன் பயணம் செய்தால், அந் தப் பயணம் நம்மை சந்தோஷப்படுத்தாது. ஒரு சாதாரண பஸ் சாரதியை நம்பி பயணம் செய்யும் நமக்கு, நமது வாழ்க்கைப் பயணத்தை, வழி நடத்தும் குருவிடம் சந்தேகப்படலாமா?

பண்டமாற்றம் என்பது வியாபாரம். ஏதாவது ஒன்றைக் கொடுத்து, தேவையான ஒன்றைப் பெறுவது. இதே வியாபாரத்தை வழிபடும் குருவிடம் எதிர்பார்க்கலாமா? நமக்கு எது தேவை என்பதை உணர்ந்து, அதைக் கொடுப்பவர்தான் குரு! இந்தக் கலியுகத்தில் குருவான, சீரடி சாயி பாபாவின் அற்புதங்களைப் பல சாயி பக்தர்கள் அனுபவித் துள்ளார்கள். தெய்வங்களின் உருவங்கள்தான் அவதாரங்கள். அப்படிப்பட்ட அந்த அவதாரங் கள் மனிதருவமெடுத்து, குருவாகவும், தெய்வங் களாகவும் வந்துண்டு. அதாவது "மனிதனும் தெய்வமாகலாம்!"

நாம் வாழுகின்ற இந்த யுகத்தில், மனிதவடிவில் குருவாக, அவதாரத்துக்குரிய அம்சமாக, நமது வேண்டுதலை ஏற்று, நமக்கு தேவையானதை தக்க சமயத்தில் தந்து, மன சாந்தியளிக்கின்ற ஒரு குருவாக சீரடி சாயி பாபா வீற்றிருக்கிறார். தெய்வங்களாகிய இராமர், கிருஷ்ணர் போன்ற அவதாரங்களைப் பற்றி இதிகாசங்களில் மட்டும்தான் படித்து அறிந்துகொண்டோம். ஆனால் அவர்கள் தோன்றிய காலகட்டத்தில் நாம் வாழக் கொடுத்து வைக்கவில்லை.

சீரடிசாயி நாதரின் அவதாரமானது, நாம் வாழ்கின்ற கலியுகக் காலத்தில் பேசப்படுகின்ற அவதாரமாகும். சீரடி சாயி பாபாவின் போதனை மிகச் சுலபமானது. கடைபிடிப்பதும் இலகுவானது. அதாவது அவரது தாரகமந்திரம் 'நம்பிக்கை' 'பொறுமை' என்பதாகும். இதனை ஒவ்வொரு சாயிபக்தனும் கடைபிடித்தால், நிச்சயம் அவரது அருள் கிட்டும்.

சீரடி சாயி பாபா தன் பக்தனிடம் கூறிய ஒரு செய்தி "அதோ அந்த மாமரத்தைப் பார். ஆயிரக்கணக் கில் பூத்து நிற்கிறது. இவை ஒன்று கூட விடாமல் காயாகி பிறகு கனியானால் எவ்வளவு ஆயிரம் மாம்பழங்கள் கிடைக்கும். அவ்வாறு நடக்கிறதா? ஒரு சில நூறு மாம்பழங்கள் மட்டும் கிடைக்கின்றன. ஏனென்றால், பலத்த காற்றடித்தால், தொடர்ந்து மழை பெய்தால் எவ்வளவு பூக்கள் மரத்திலிருந்து கீழே விழுந்து விடுகின்றன? எந்தப் பூக்கள் காற்றை எதிர்த்தும், மழையை எதிர்த்தும் உறுதியாக நிற் கின்றன. அப்படி நிற்பவைதான் பின்னர் காயாகி பழமாகின்றன. அதுபோல் தன்னிடம் வருகின்ற பக்தர்கள், விடாமுயற்சியுடனும் விசுவாசத்துடனும், பொறுமையுடனும், நம்பிக்கையுடனும் இருந்தால், தனது முழுக்கருணையும் கிடைக்கும்." அது அசராத பக்திக்கு ஒரு எடுத்துக்காட்டு.

சீரடி சாயி பாபாவின் மகா சமாதி தினம், ஒவ் வொரு வருட நவராத்திரி தினத்தையொட்டி, விஜய தசமி நன்னாளில் வருவதுண்டு. உலகிலுள்ள சீரடி சமஸ்தானங்களில், வெகு சிறப்பாகக் கொண் டாடப்படும் வைபவமாகும். இவ்வருடம் ஆக் 2 ஆம் திகதி, வியாழக்கிழமை, பாபாவுக்குப் பிடித்த மான குரு வழிபாட்டுத் தினத்தில் அமைந்துள் ளது.

கொழும்பு புதுச் செட்டித் தெருவிலுள்ள சீரடிமந் தீரில், முழு நாள் நிகழ்ச்சிகளாக யாகம், பூஜைகள், பஜனை, அன்னதானம் என்று நடைபெறுகின்றன. விஷேட நிகழ்வாக சீரடி சாயி பக்தர்களின் காணிக் கையால் உருவான தங்க கீரீடம், பக்தர்களின் சார்பாக சூட்டப்படவிருக்கிறது. அன்று மாலை சித் திரத்தேரோட்டம் இடம்பெறும். சீரடி சமஸ்தானத் தினால் கிடைக்கப்பட்ட, "சீரடி ஊதி" வழங்கப்படும்.

இன்றைய காலகட்டத்தில், இந்து சமய வளர்ச் சிக்கு பெரும் தொண்டாற்றிவருபவரும், வருடா வருடம் 'சீரடி சாயி பாபாவின் மகிமையை,' கொழும்பு வாழ் சாயி பக்தர்களுக்கு. ஒரு வரப்பிர சாதமாக செய்துவருபவருமான, சீரடி சாயி பக்தர், ரவி ஜ/வலர்ஸ் மகேஸ்வரன் அவர்களது முயற்சியாக, நாளை ஒக்டோபர் 3 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு, கொழும்பு புதுச் செட்டித் தெருவிலுள்ள, சீரடி மந்தீரில் சிறப்பு நிகழ்வாக, ஒரு சொற்பொழிவு ஏற்பாடாகியுள்ளது.

அகில உலக இந்து ஆன்மீகச் சொற்பொழிவு சாம்ராஜ்ஜியத்தில், தனக்கென்று தனிச் சிறப்பு வாய்ந்த, தனி இடம் பிடித்த. ஆன்மீக, இலக் கிய, பட்டி மன்றப் பேச்சாளர், நகைச்சுவை கலந்த பக்தி பரவசத்துடன் ஆழமான கருத்துக்களைச் சிந்திக்க வைக்கத்தக்க, இந்திய தொலைக்காட்சி புகழ், அருமையான சொற்பொழிவாளர், 'தமிழ் இலக்கியம்', 'இதழியல் மற்றும் தகவல் தொடர்பி யல்,' 'பொது மேலாண்மை' துறைகளில் எம்.ஏ. பட்டங்களைப் பெற்றவர். 'சொல்லின் செல்வர்', 'சிந் தனைச் செம்மல்" திரு. பி. மணிகண்டன் அவர்கள். இவர் பல நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, பல இந்து சமய, இலக்கிய சொற்பொழிவுகள் நடாத்தி, பாராட்டுகளையும் பட்டங்களையும் பெற்றவர். இலங்கைக்குப் பல தடவைகள் விஜயம் செய் துள்ளார். இவர் ஒரு சீரடி சாயி பக்தர். 'இறைதூ தர் சீரடி சாய் பாபா' என்ற நூலின் எழுத்தாளர். ஆனால் முதன் முதலாக 'சீரடி சாயி பாபாவின் மகிமை' என்ற தலைப்பில், சிறப்பு சொற்பொழிவு, உலகிலேயே இலங்கையில் கொழும்பு சீரடி சாயி மந்தீரில் நடாத்தவுள்ளார்.

■



# முல்லைத்தீவில் 230 முன்பள்ளி மாணவர்களுக்கு ஆஸியின் 'தாயகம்' வானொலியின் அன்பளிப்பு!

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு ஆஸ்ஸ்திரேலியாவில் இருந்து 24 மணி நேரம் ஒலிபரப்பாகும் "தாயகம்" தமிழ் ஒலிபரப்புச் சேவை வானொலியின் "ஒன்றாய் இணைவோம்" திட்டத்தின் கீழ் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முள்ளியவளை மற்றும் வற்றாப்பளை பிரதேசங்களில் இடம்பெற்றன.

நிகழ்வில் முன்னாள் கரைதுறைப் பற்று பிரதேச சபை தவிசாளர் க.தவராசா, பிரதேச சபை உறுப்பினர் ஞா.ஜுட்சன், சமூக ஆர்வலர்களான இ. தயாபரன், ப.சிறீதரன், வற்றாப்பளை மற்றும் கேப்பாபுலவு கிராம சேவையாளர்கள், பங்குத்தந்தை, முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

சிறுவர் தினத்தினையொட்டி கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினரும், சமூக செயற்பாட்டாளருமான ஞா.ஜுட்சனின் வேண்டுகோளையடுத்து, "தாயகம்" வானொலியின் இயக்குநர் விஜய் இராஜகோபால் வழங்கிய நிதி உதவியின் ஊடாக 10 முன்பள்ளிகளைச் சேர்ந்த 230 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வன்னி பிரதேசத்தில் பல்வேறு சமூக உதவித் திட்டங்களை "தாயகம்" தமிழ் ஒலிபரப்புச் சேவை வானொலி தொடர்ந்து முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.






















# அறிவும் அறமும் ஒன்றிணையும் வெற்றி விழாதான் விஜயதசமி



கு.லோகிதா
(யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,
ஊடக கற்கைகள் துறை)

வருடந்தோறும் புரட்டாசி மாதத்தில் கொண்டாடப்படும் ஒன்பது நாள்கள் விரதத்துடனான பண்டிகையே நவராத்திரி ஆகும் . நவமி என்பது ஒன்பதைக் குறிக்கும். அந்த வகையில் அன்னை சக்திதேவியை ஒன்பது நாள்களும் வெவ்வேறு ரூபங்களில் மக்கள் வழிபடுகின்றனர்.

அவற்றில் 'விஜய' என்றால் வெற்றியை எனவும் 'தசம' என்றால் 10 எனவும் (தசம் = பத்து) இதை "விஜயதசமி" எனக் கொண்டாடுகிறோம். எனவே ஒன்பது நாள்களும் விரதம் இருந்துவழிபடுபவர் பத்தாம் நாள் அன்னையின் வெற்றியை கொண்டாடி விரதத்தை முடித்துக் கொள்வதனையே வழக்கமாக கொண்டிருக்கின்றனர்.

புரட்டாதி மாதத்தில் வரும் அமாவாசைக்கு அடுத்த நாளான பிரதமை முதல் நவமி வரை மாலை வேளைகளில் அம்பிகையின் பல ரூபங்களை வழிபடுவது நவராத்திரி ஆகும். இது முதல் மூன்று நாள்களும் வீரத்தை வேண்டி துர்க்கையையும், அடுத்த மூன்று நாள்கள் செல்வத்தை வேண்டி லட்சுமியையும், இறுதி மூன்று நாள்களும் கல்வியை வேண்டி சரஸ்வதியையும் துதிக்கின்றோம். இறுதி நாளான நவமி அன்று 'சரஸ்வதி பூஜை'. தொடர்வது 'ஆயுத பூஜை' என்றும் அழைக்கப்படுகிறது.

நாம் செய்யும் செயல்கள், வித்தைகள் அனைத்திற்கும் அதிபதி சரஸ்வதி. ஆகவே அன்று வீட்டில் உள்ள கருவிகள், எழுதுகோல்கள், புத்தகங்கள் அனைத்தையும் அழகுற அமைத்து சரஸ்வதி தேவியின் அருள் பெற வழிபாடு செய்வோம். அன்று அடுக்கி வைக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் ஆயுதங்களை அன்றே உபயோகிக்காமல் மறுநாள் விஜயதசமி என்று எடுக்கப்பட்டு உபயோகிக்கப்படுகின்றன.

விஜயதசமி என்றாலே வெற்றி தருகின்ற நாள் என்று அர்த்தம். நவராத்திரியின் போதுதான் துர்க்காதேவி மகிஷாசுரனுடன் எட்டு நாள்கள் போர் செய்து ஒன்பதாம் நாளில் நவமியில் மகிஷாசுரனை வதம் செய்தார். மறுநாள் தசமியில் தேவர்கள் அந்த வெற்றியை ஆயுத பூஜை செய்து கொண்டாடியமையால் நாம் அதை விஜயதசமி என்று கொண்டாடுகின்றோம். பத்தாம் நாள் விஜயதசமி அன்று துவக்கப்படும் எந்தக் காரியமும் மிக வெற்றிகரமான அமையும். அன்று குழந்தைகளுக்கு வித்யா உபதேசம் என்னும் கல்வி கற்கத் தொடங்கும் அற்புதமான நாளாகவும் கொண்டாடுவார்கள்.

அந்த விஜயதசமி நன்னாளில் சிறு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வியை தொடக்கினால் அவர்கள் மென்மேலும் கல்வியில் சிறந்து விளங்குவார்கள் என்பது ஐதீகம். சரஸ்வதி பூஜை அன்று அடுக்கி வைத்த புத்தகங்களை மீண்டும் இதே தேசம் என்று புதித்து நைவேத்தியத்துடன் ஆரத்தி காட்டி அன்று சில வரிகளாவது படித்தால் கல்வி மென்மேலும் அபிவிருத்தி அடையும் என்பதே நம்பிக்கை.

மேலும் விஜயதசமியின் ஆன்மீக முக்கியத்துவமாக இலங்கையை ஆண்ட பத்து தலை அரசு மன்னனான இராவணனனை ராமர் வெற்றி கொண்ட நாளும் இந்த நாளே என்று கருதப்படுகின்றது. துர்க்கா தேவியால் கொல்லப்பட்ட அசுரர்களின் அரசனான மகிஷாசுரனின் முடிவையும் இந்த நாள் குறிக்கிறது. புராணங்களின்படி, மகிஷாசுரனை அழிக்கக்கூடிய சக்தியை உருவாக்க விரும்பியதால் கடவுளர்கள் தங்கள் ஆன்மீக சக்திகளை ஒன்றிணைத்து துர்கா தேவியே உருவாக்கினர் என்பர். பூமியில் தனது பெற்றோரின் வீட்டில் 10 நாள்கள் தங்கிய பிறகு துர்கா தேவி கைலாசத்திற்கு திரும்



பும் பயணத்தை இந்த நாள் குறிக்கிறது. மற்றும் மகாபாரதத்தில் பாண்டவர்கள் கௌரவர்களை வீழ்த்தி வெற்றி பெற்றதையும் அவர்களின் வனவாசகத்தின் முடிவை விஜயதசமி குறிக்கிறது.

ஆகவே நேற்று ஒக்டோபர் முதலாம் திகதி இரவு 7 மணி தொடக்கம் இன்று ஒக்டோபர் இரண்டாம் திகதி இரவு 7:10 மணிக்கு விஜயதசமி முடிவடைகிறது. அதே நேரத்தில் திருவோண நட்சத்திரம் இன்று ஒக்டோபர் இரண்டாம் தேதி காலை 9:13 முதல் காலை 9.34 மணி வரை இருக்கும். ஆகவே இந்த வித்தியாசமும் நாளில் வெற்றியைத் தரும் நாள் என்பதனால் புதிதான முயற்சிகள், கல்வி, புதிய வேலை, பிள்ளைகளுக்கு ஏடு தொடக்குதல் போன்ற நற்செயல்களை எல்லாம் இந்த நாளிலே செய்வதும், ஆலயம் சென்று அனைவரினது வாழ்வும் சிறப்பு பெற வேண்டுவதும் சிறந்ததாகும். ஆகவே விஜயதசமி என்பது வெறும் மத வழிபாடு அல்ல, அது அறிவு, அறம், வெற்றி எனும் மூன்றையும் இணைக்கும் வாழ்வியல் விழா என்று கூறலாம்.





# காட்டுப்பன்றி - குரங்குகள் கூட்டங்கள் படையெடுப்பு அம்பகமுவ, நோர்வூட் மக்கள் கடும் நெருக்கடியில்!

**(மஸ்கெலியா நிருபர்)**

அம்பகமுவ மற்றும் நோர்வூட் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பல கிராமங்களுக்குள் காட்டுப்பன்றி கூட்டங்கள் படையெடுப்பதால் அந்த கிராமங்களில் வசிக்கும் விவசாயிகள் மற்றும் கிராம மக்கள் மிகுந்த துயரத்திலும் அச்சத்திலும் உள்ளனர்.

அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கினிகத்தேன, கலவெல்தெனிய, அபர்டீன், லக்சபான, கிரிவான் எலிய, ஹங்கராபிட்டிய, கொட்டெல்லென மற்றும் மஸ்கெலியா, நல்லதண்ணி, லக்கம் மற்றும் பொகவந்தலாவ சாமி மலை ஆகிய பகுதிகளில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களுக்கு தினமும் வரும் இந்த காட்டுப்பன்றிக் கூட்டங்கள், குறுகிய காலத்தில் தங்கள் பயிர்களை அழிப்பதாக அந்தப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கூறுகின்றனர்.

ஒரு கூட்டத்தில் கிட்டத்தட்ட 50 பன்றிகள் மற்றும் குரங்குகள் தங்கள் குட்டிகளுடன் இருக்கின்றன எனவும், பன்றிகள், குரங்குகள் எந்த பயமும் இல்லாமல் வீடுகளுக்குள் புகுந்து உணவு மற்றும் பானங்களை எடுத்து கொள்வதாகவும் குடியிருப்பாளர்கள் கூறுகின்றனர்.

சில நேரங்களில் மக்கள் சாப்பிடும் இடங்களில் புகுந்து குரங்குகள் அவர்களின் கைகளில் இருந்து உணவைப் பறிக்க முற்படுகின்றன எனவும், இது போன்ற சமயங்களில் அவை கடிக்கவும் பாய்கின்றன எனவும் அவர்கள் கூறுகிறார்கள்.

குரங்குகளை விரட்ட முயற்சிக்கும் போது அவை பாய்ந்து கடிக்கப் பழகி விட்டன எனவும், இப்படி குரங்குகளிடம் கடிபட்ட பலர் காயமடைந்து மருத்துவ சிகிச்சை பெற்ற பல நிகழ்வுகள் உள்ளன எனவும் பாதிக்கப்பட்ட கிராம மக்கள் கூறுகின்றனர்.

கிராமவாசிகள் குரங்குகளை விரட்ட பல்வேறு முறைகளை பயன் படுத்தினாலும், சில நாள்களுக்குப் பிறகு குரங்குகள் அந்த முறைகளுக்கு அஞ்சாமல் போய்விடுகின்றமையால், அவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனவும் அவர்கள் கூறுகிறார்கள்.

தங்கள் பயிர்கள் அழிக்கப்படுவதால் கடுமையான பொருளாதார சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறும் விவசாயிகள், குரங்கு, பன்றிகளால் ஏற்படும் அழிவு காரணமாக விவசாயத்தை நிறுத்தி விட்டனர் எனவுன் கூறுகின்றனர்.

இந்த மிருகங்களால் ரேபிஸ் தொற்று நோய் ஏற்பட்ட நிலையில் பல ஆண்டுகளாக மக்கள் பாதிக்கபட்டுள்ளனர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு, பொறுப்பானவர்கள் உறுதியான தீர்வை அவசரமாக வழங்க வேண்டும் எனக் கோரப்படுகின்றது.



# சர்வதேச சிறுவர் தினத்தை கறுப்புப்பட்டி அணிந்து கரிநாளாக அனுஷ்டித்த கிழக்கு மாகாண சிறார்கள்

## திருக்கோவிலில் தீப்பந்தம் ஏற்றிப் போராட்டம் நிறைவு



( வி.ரி.சகாதேவராஜா)

நேற்றைய சர்வதேச சிறுவர் தினத்தை கிழக்கு மாகாண சிறுவர்கள் கறுப்புப் பட்டி தரித்து கரிநாளாக அனுஷ்டித்தனர்.

மேலும் தீப்பந்தம் ஏந்தி தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் தம்பிலுவில் மத்திய சந்தையின் முன்னால் இடம்பெற்றது.

கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் தம்பிலுவில் மத்திய சந்தை முன்பாக சனிக்கிழமை ஆரம்பித்த நீதிக்கான சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று புதன்கிழமை ஐந்தாவது நாளாக நடைபெற்று நிறைவடைந்தது.

அதனையடுத்து அதே இடத்தில் அரசியல்வாதிகளை அழைக்காமல் சிறுவர் தினத்தை கறுப்புப்பட்டி தரித்து சிறு ஊர்வலத்துடன் கரிநாளாக அனுஷ்டித்தனர். அங்கு தீப்பந்தம் ஏந்தி எதிர்ப்பையும் வெளியிட்டனர்.

மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை மாவட்ட உறவுகளும் அங்கு வந்து போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் ஸ்ரீலங்காவின் உள்நாட்டு பொறிமுறையை நிராகரிக்கின்றோம், தமிழின வழிப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், போர் குற்றங்கள் மற்றும் மனித புதைகுழிகள் குறித்து நாம் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் எனும் தொனிப் பொருளுடன் இப் போராட்டம் ஆரம்பித்தது.

இப் போராட்டத்தில் அதிகளவிலான பொதுமக்களும் பாதிக்கப்பட்ட தரப்பினரும் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளும் கலந்து கொண்டிருந்தனர்.


















# கிழக்கிலும் நீதிக்கான சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டம் நிறைவு

## நேற்று இறுதிநாள் நிகழ்வில் சாணக்கியனும் பங்கேற்பு

( வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் தம்பிலுவில் மத்திய சந்தை முன்பாக சனிக்கிழமை ஆரம்பித்த நீதிக்கான சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுப் புதன்கிழமை ஐந்தாவது நாளாக நடைபெற்று நிறைவடைந்தது.

இறுதிநாள் நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் நாவிதன்வெளி காரைதீவு ஆலையடிவேம்பு காரைதீவு தவிசாளர்களும் கலந்து கொண்டனர்.

இறுதியாக கிழக்கின் மூன்று மாவட்டங்களின் தலைவிகளும் ஐ.நாவுக்கான மகஜரை நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மற்றும் தவிசாளர்களிடம் வழங்கினார்கள்.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட உறவுகளும் அங்கு வந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

வயோதிபர் தினமான நேற்று அக்டோபர் முதலாம் திகதியும் வயோதிபர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

பலர் சோர்ந்து காணப்பட்டனர். இன்னும் பலர் அழுதழுது கருத்து கூறினர். வயோதிகர்கள் பலர் படுத்த படுக்கையில் இருந்தனர்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் ஸ்ரீலங்காவின் உள்நாட்டு பொறிமுறையை நிராகரிக்கின்றோம், தமிழின வழிப்பு,வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், போர் குற்றங்கள் மற்றும் மனித புதைகுழிகள் குறித்து நாம் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் எனும் தொனிப் பொருளுடன் இப் போராட்டம் ஆரம்பித்தது.

இப் போராட்டத்தில் அதிக எண்ணிக்கையான பொதுமக்களும் பாதிக்கப்பட்ட தரப்பினரும் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளும் கலந்து கொண்டிருந்தனர்.





